**மேல் மாகாண சபை -2020 ஆண்டு**

------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

--------------------------------------------------

மேல் மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2021 திசெம்பர் 12 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 பெப்ரவரி 09 ஆம் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன் வைப்பதற்காக ஆளுநரிடமும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புதிய மாகாண சபைக் கட்டடித்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 557,984,598 ஆன சொத்துக்கள் 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதி 09/2019 ஆம் இலக்க மேல் மாகாண பிரதான செயலாளரின் நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 நவம்பர் 30 இற்கு முன்னர் மாகாண சபையின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவை பாரமேற்கப்பட்ட போது பெறப்படுகின்ற பற்றுச்சீட்டு கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பெறுவனவுக் கட்டளை வழங்கப்பட வேண்டியிருந்தது. ஆனால் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பொருளாதார மேம்பாட்டு பணியகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் பெறுகை நடவடிக்கைகள் | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொருளாதார மேம்பாட்டுப் பணியகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ள துடன் அத்தகவல்கள் கிடைத்த பின்னர் இவ்வருடத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிரதான செயலாளரின் நிதிச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் சொத்துக்கள் பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு பொறியியலாளர் பணியகத்தினால் 2018 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் ரூபா 557,984,598 காசாகச் செலுத்தப்பட்டு பெறப்பட்ட சொத்துக்களுக்கான அவ்வாறான பற்றுச்சீட்டு கட்டளைகள் அல்லது பெறுவனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே மேற்படி சொத்துக்கள் மேல் மாகாண சபையின் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் 04/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கையின் 02 மற்றும் 07 ஆம் பிரிவுகள் மற்றும் 2019 மார்ச் 01 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க மேல் மாகாண நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 சனவரி 01 இலிருந்து அமுல்படுத்தப்படும் விதத்தில் அனைத்து நிதியல்லாச் சொத்து:க்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்கள் கொம்ட்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் பொறியியலாளர் | 2021 ஆம் ஆண்டில் உரிய மதிப்பிடல்கள் செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணியகத்தின் ரூபா 6,069,989,056 ஆன சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு குறிப்பிட்ட சரியான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் அவ்வாறு மதிப்பிடப்படாத காரணத்தினால் சரியான பெறுமதி கணக்குகளிலும் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் வைப்புச் செய்யப்பட்ட 02 வருடங்களுக்கு மேற்பட்ட ஆனால் காப்பீடு செய்யப்படாத, 02 அமைச்சுக்கள், 09 திணைக்களங்கள், 18 பிரதேச செயலகங்கள் மற்றும் ஒரு ஆணைக்குழுவின் மொத்தம் ரூபா 64,472,590 ஆன 581 வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை மிகுதிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத வைப்புக் கணக்கு மிகுதிகள் 2021 ஆம் ஆண்டிற்குள் தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்பு மிகுதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக மேல் மாகாண பொருளாதார மேம்பாட்டு பணியகத்தின் ரூபா 7,502,574 கிரயமான நிதியல்லாச் சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு | ரூபா 6,579,182 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்டுள்ளன. | தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற முழுமையாகத் தேய்விடப்பட்டு முடிக்கப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருகின்றன. இச் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் சொத்துக்களில் உள்ளபடியான பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ரூபா 230,917,360 ஆன கட்டுநிதி மிகுதி 2021 யூலை 12 வரையில் மேல் மாகாணத் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத மிகுதிகளை முடிந்தளவு விரைவில் தீர்க்கப்பட்டு முடிக்குமாறு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத கட்டுநிதி மிகுதிகள் விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் ரூபா 21,801,471 ஆன அனுப்புகை மிகுதி 2021 யூலை 12 வரையில் மேல் மாகாணத் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்புகை மிகுதிகளை முடிந்தளவு விரைவில் தீர்த்து முடிக்குமாறு சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அனுப்புகை மிகுதிகளை விரைவில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மேல்மாகாண வியாபாரப் பெயர்ப் பதிவுகள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற ஆனால் மேல்மாகாண பிரதான செயலாளரின் 06/2018 ஆம் இலக்க 2018 பெப்ரவரி 26 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் பதிவு செய்யும் உரிமையைக் கையேற்பதற்கான நடவடிக்கையின்றி, பிரதான செயலாளரின் பதியப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் | கருத்துரை வழங்கப்படவில்லை. | மோட்டார் வாகனத்தின் உரிமையை கையேற்று சரியான சொத்துக்களின் தொகுதியின் கணக்கிடப்.படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 3,400,000 அத்திணைக்களத்தின் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கீழே கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | பொருளாதார மேம்பாட்டு பணியகத்தினால் 2020 சனவரி 21 இல் மாகாண கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 1,480,000 பெறுமதியான கொள்கலன் (Container Cabin) 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி அமைச்சினால் கையேற்கப்பட்டு பெறுவனவு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி அமைச்சில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்களை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | கம்பஹாப் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ள 46 வாகனங்கள் மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சொத்துக்களில் சரியான வாகனங்களின் பெறுமதியைக் காட்டுவதற்கு முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது இவ்வாகனங்கள் மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதி கணக்கிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 2020 திசெம்பர் 31 இல் பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான 32 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ் வாகனங்களின் பெறுமதி | கருத்துரை வழங்கப்படவில்லை. | வாகனங்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

மதிப்பிடப்பட்டு வேண்டும்.
கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- வேண்டுமென்றே தவிர்ப்புச் செய்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பு செய்தல் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக முகாமையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 1.5 தலைப்பு - 104 - உள்ளூராட்சி, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மற்றும் எரிசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு (மேல் மாகாணம்)

---

### 1.5.1 மேல் மாகாண பொருளாதார மேம்பாட்டு பணியகம்

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருளாதார மேம்பாட்டு பணியக சாசனத்தின் 19(1) பிரிவின் பிரகாரம் பணியக சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைச் | நிதி விதிகள் வரைவுபடுத்தல் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | சாசனத்தின் பிரகாரம் விரைவில் விதிகள் தயாரிக்கப்பட்டு அளுநரால் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்துவதற்கு, அமுலாக்குவதற்கு மற்றும் கட்டணம் அறவிடுவதற்கு பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் விதிகள் தயாரிக்கப்பட்டு ஆனுநரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேல் மாகாணத்தில் விவசாயம், கைத்தொழில், வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களை மேம்படுத்தல், நிறுவுதல் மற்றும் கம்பனிகளைச் செயற்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணியகம் நிறுவப்பட்டிருந்தது. அந்நடவடிக்கைகள் பயனுள்ளதாக மற்றும் செயற்திறனாக நிறைவேற்றப்படுவதற்காக பணியகத்திற்கு மீளாய்வாண்டில் மேல் மாகாண அமைச்சிடம் (மே.மா) பெறப்பட்ட ரூபா 20,000,000 ஆன மூலதன மானியம் வருட இறுதியின் போது எவ்வித நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை. | அத்தொகை பயன்படுத்தப்பட்டு வெஸ்ப்ரோ அச்சகத்திற்கான மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அதற்காக மேலும் நிதி ஒதுக்கங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நிலுவைத் தொகையைப் பூர்த்தி செய்யும் வரையில் கால வைப்புக்கள் முதலீட்டில் வைத்திருப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | மூலதன மானியம் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் பணியகத்தின் கீழ் காணப்படுகின்ற ‘‘வெஸ்ப்ரோ’’ பாதுகாப்புச் சேவையின் மூலம் வழங்கப்படும் சேவைக்கு பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 11,747,533 அறவிட வேண்டியிருந்தது. அவ்வாறு 2015 மார்ச் 25 இல் ஹோமாகம பிரதேச செயலகத்தின் குறைபாடுள்ள பொருட்களுக்கான களஞ்சியசாலை தீப்பிடித்துச் சேதமடைந்தமையால் சபைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 2,117,441 ஆன நட்டம் ‘‘வெஸ்ப்ரோ’’ பாதுகாப்புச் சேவை, பிரதேச செயலகத்திற்கு சேவை வழங்கியமைக்காக 2019 செப்டம்பரிலிருந்து திசெம்பர் வரையான மாதங்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் குறைப்பதற்கு பிரதேச சபை முடிவு எடுத்திருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,103,249 ஆனது 2019 செப்டம்பர் தொடக்கம் திசெம்பர் மாதங்களின் பற்றுச் சீட்டுக்களில் குறைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பொருளாதார மேம்பாட்டுப் பணியகம் மற்றும் ஹோமாகம பிரதேச சபைகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைப் பிரகாரம் நடுவருக்கு | 2021 மார்ச் 22 இல் பொருளாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு விடயம் குறிப்பிடப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பணியகத்தினால் நடுவருக்கு அனுப்பப்பட்டு இத்தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்படாது சபையினால் ஒரு தலைப்பட்சமாக இத்தொகை பணியகத்திற்கு செலுத்தப்படாது தேக்கி வைக்கப்பட்டிருந்தது. பணியகத்தினாலும் இத்தொகை அறவிடப்படுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் ‘‘வெஸ்ப்ரோ’’ பாதுகாப்பு பிரிவின் ஊழியர்களின் சீருடைக் கடன்களுக்காக (Uniforms Loan) அறவிடப்பட வேண்டிய மிகுதி ரூபா 1,088,057 என்பதுடன் அம்மிகுதியில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களிடம் அறவிட வேண்டிய ரூபா 777,227 உம் சேர்க்கப்பட்டிருந்தது. | 2012/2013 ஆம் வருடங்களுக்காகக் காணப்பட்ட ரூபா 777,227 ஆன மிகுதி கணக்குப் புத்தகங்களில் நீக்கப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சீருடைக் கடன்கள் விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பணியகத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டம் மேற்பார்வை செய்தல், பணியகத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் அடங்கலாக மேல்மட்ட முகாமையாளரின் பொறுப்பொன்று மற்றும் கடமையின் ஒரு பகுதியாகும். ஆனால் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 வருட இறுதி வரை ‘‘வெஸ்ப்ரோ’’ பாதுகாப்பு செயற்திட்டத்தின் பிரதான நிறைவேற்று | மேல் மாகாண சபையின் 2010 இன் 09 ஆம் இலக்க பொருளாதார மேம்பாட்டு பணியகத்தின் சாசனத்தின் (15,ஈ) சாதாரண அதிகாரங்களின் கீழ், பணியகத்தின் ஊழியர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக உரிய முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் உட்பட 04 உத்தியோகத்தருக்கு செயற்திட்ட மேற்பார்வைக் கொடுப்பனவொன்றாக ரூபா 2,245,000 செலுத்தப்பட்டிருந்தது. மாகாண திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டும் 2013 ஆம் ஆண்டிலிருந்து எரிபொருள் படியொன்றாக செலுத்தப்பட்டிருந்த இக்கொடுப்பனவுகள் 2018 மார்ச் மாதத்திலிருந்து செயற்திட்ட மேற்பார்வைக் கொடுப்பனவுகளாக கொடுப்பனவின் பெயரில் மாற்றத்தை ஏற்படுத்திச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | “வெஸ்ப்ரோ” அலுவலகச் சுற்றாடலை வேண்டிய சுகாதார சேவைகள் செயற்திட்டத்தின் சேவைகளை வழங்குவதற்காக செயற்திட்டக் கொடுப்பனவொன்றாக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் வருட இறுதி வரையில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட பணியகத்தின் 17 உத்தியோகத்தர்களுக்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இன்றி ரூபா 3,911,710 செலுத்தப்பட்டிருந்தது. | மேல் மாகாண சபையின் 2010 இன் 09 ஆம் இலக்கப் பொருளாதார மேம்படுத்தல் பணியகத்தின் சாசனத்தின் (15,ஈ) சாதாரண அதிகாரங்களின் கீழ், பணியகத்தின் ஊழியர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்காக பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உரிய ஆளுனரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (மாகாண சபை கலைக்கப்பட்டதால்) |

## 1.5.2 மேல் மாகாண சுற்றுலாச் சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் சுற்றுலாச் சபையினால் வெளியிடப்பட்டிருந்த 17 சஞ்சிகைத் தொகுதிகளுக்காகப் பெற வேண்டிய சஞ்சிகை வருமானம் ரூபா 5,572,200 மற்றும் 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற ரூபா 776,282 ஆன பெற வேண்டிய மிகுதியொன்று மீளாய்வாண்டிற்குள் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. | குறிப்பிட்ட நிலுவைத் தொகையை அறவிடுவது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று ஆளுனருக்கு அனுப்புவதற்கு தயார் செய்யப்படுகின்றது. | பெற வேண்டிய மிகுதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்காக 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதமொன்றின் மூலம் 15 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். இருந்த போதும், சபைக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காத காரணத்தினால் இது பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்ததுடன் | ஆட்சேர்ப்பு நடைமுறை இற்றை வரையில் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகாரம் பெறப்பட்டவுடன் சபையின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கான உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்பதை தெரிவிக்கின்றேன். | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு விரைவில் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தற்போதைய பதவியணியினர் 06 பதில் கடமை பதவிகளில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 09 பதவிகளையும் உள்ளடக்கியுள்ளது. | | |
| (இ) | சபையின் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற 08 முகாமைத்துவ உதவி அலுவலர்கள் மற்றும் 04 பதிற் கடமையாற்றும் முகாமைத்துவ உதவி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 03 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மட்டுமே காணப்படும் வகையில் 09 பேர் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சேவை அவசியத்தின் அடிப்படையில் ஆரம்பத்தில் இந்த அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த துடன் 2020 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினரின் 03 முகாமைத்துவ சேவை அலுவலகர் பதவிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 1.6 தலைப்பு 106 - விவசாய, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி, விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சு

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 08, 09 பிரிவுகள் மற்றும் 2018 மார்ச் 16 ஆந் திகதிய CSO/ADM/18/38/01/01-2018 | 2020 ஆகஸ்ட் 24 இலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அதிகாரி தொடர்பாக பிரதான செயலாளரின் பரிந்துரை அல்லது அரச | குறிப்பிட்ட நியமனம் சட்டரீதியற்ற நியமானமொன்றாக கருதப்பட்டு செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்க மேல் மகாாண சபை பிரதான செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஓய்வூதியம் பெற்ற ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சின் செயலாளர், திணைக்களத் தலைவரினால் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாதிரிப் படிவம் சமர்ப்பிக்கப்படும் போது அதற்காக பிரதான செயலாளரின் பரிந்துரை பெறப்படல் வேண்டும். ஆனால் விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மீன்பிடி, விலங்கு உற்பத்தி, சுகாதாரம் மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவிக்காக 2020 ஆகஸ்ட் 24 இலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரி தொடர்பாக பிரதான செயலாளரின் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமோ பெறப்பட்டிருக்கவில்லை. | |

### 1.6.1 விவசாய சேவைகள் அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேல் மாகாண சபையில் விவசாய உற்பத்திகளைப் பொதி செய்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் அதற்காக | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப் படுகின்ற நோக்கங்கள் |

| | | |
|---|---|---|
| பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதற்கு விவசாய சேவைகள் அதிகார சபையினால் ரூபா 2,000,000 பெறுமதியான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம், கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள், ஒப்பந்தங்கள் மூலம் சங்கங்களுக்கு பாவனைக்கான உரிமை வழங்கப்பட்டு விவசாய சேவகள் மத்திய நிலையங்கள் மற்றும் சமூக சேவை நிலையங்களில் நிறுவப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட குழுக்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அந்த உபகரணங்கள் நீர்கொழும்பு, பிடிபன நீர்வாழ் மத்திய நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் படிபன நீர்வாழ் மத்திய நிலையத்தினால் கையேற்கப்பட்ட உபகரணங்கள் பல்வேறு பிரச்சினைகளால் பின்னர் அதிகார சபைக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | நிறைவேற்றப் படுவதற்கு மற்றும் பெறுகை செயற்பாடுகள் தொடர்பான பரிசோதனையொன்று செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தலைப்பு 107 - தெருக்கள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு

---

### 1.7.1 மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி சுவீகரிக்கப்படாது களணி தெற்கு வீதி | 2011 ஆம் ஆண்டில் அக் காணிகளின் | உத்தியோகத்தரின் கவனயீனத்தால் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்யப்படுவதற்காக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக காணி உரிமையாளரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் ரூபா 111,419,945 நட்டஈடாக செலுத்துவதற்கு தீர்ப்பளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 89,011,500 செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டிற்குப் பெறுமதியை பெற்று இந்நட்டஈடு வழங்கப்பட்டது என்பதை தெரிவிக்கின்றேன். | நட்டஈடு செலுத்தப் பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நானாவித செயற்திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையால் தனிநபர் அடிப்படையில் 408 ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 146 ஊழியர்கள் அதிகார சபையின் நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக 544 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இப்பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்காக இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விட மேலதிகமாக ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படல் செய்யப்படலாகாது. |

## 1.7.2 கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சதுரஅடி 7,800 அளவிலான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை அமைந்துள்ள கட்டிடம் 2020 ஆம் ஆண்டு வரையில் ரூபா 3,360,000 ஆன வருடாந்த வாடகையின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. அக்கட்டிடத்தின் 750 சதுரஅடி அளவு 2015 ஆம் ஆண்டிலிருந்து அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்டு வராததுடன் அப்பகுதியின் சதுரஅடி அளவின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் செலுத்தப்பட்டிருந்த வாடகை ரூபா 1,759,423 ஆகும். 2015 சனவரி மாதத்திலிருந்து விளைவற்றுக் காணப்பட்ட அப்பகுதி பயனுள்ள செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு 2021 மார்ச் 31 வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | விளைவற்றதாக காணப்படுகின்ற பகுதி பயனுள்ள செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 தலைப்பு 108 - கல்வி, கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நீண்டகாலமாகக் காணப்பட்டு வருகின்ற கல்வி அமைச்சின் 03 வாகனங்கள் விபத்திற்குள்ளானதில் ஏற்பட்ட நட்டம் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியொன்று காணாமல் போனமை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகையான ரூபா 3,295,634 ஆன நட்டமொன்றுக்காக மேல் மாகாண நிதி விதி 54.1.6 இன் பிரகாரம் பொறுப்பான தரப்பினடமிருந்து சேதத்தை பூரணப்படுத்துவதற்கு அல்லது முறையான அங்கீகாரத்துடன் புத்தகங்களில் நீக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8.1 மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 7,675,150 ஆன பெற வேண்டிய கணக்கு மிகுதிகளில் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 147,275 மற்றும் 03 வருடம் முதல் 05 வரையான | கருத்துரை வழங்கப்படவில்லை. | மீதிகளை அறவிடுவதற்கும் அல்லது அறவிட முடியாவிட்டால், பொறுப்பானவர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| காலப்பகுதியிலிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 435,325 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2017 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சாசனத்தின் 9(3), 9(4) மற்றும் 9(5) ஏற்பாடுகளில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ மென்பொருள் தயாரிக்கப்படுவதற்கு அதிகார சபையால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,756,750 செலவிடப்பட்டு மேல் மாகாண சபை புதிய கட்டிடத் தொகுதிக்கு முறைப்பாடு முகாமைத்துவ முறைமையொன்று தனிப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டிருந்தது. | முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அதிகார சபையில் போதுமானளவு பதவியணியொன்று காணப்படாமையால் முறையான பெறுகை நடைமுறைகளின் கீழ் வழங்குனரை தெரிவு செய்வதற்கு முடியாதிருந்தது. | சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.8.2 சுற்றுலா விடுதிகள் கட்டுப்பாட்டு அதிகாரசபை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,350,000 பெறுதிக்கு கணக்கிடப்பட்டிருந்த டபள் கெப் வாகனத்தின் மற்றும் முச்சக்கர வண்டியின் உரிமை மேல்மாகாண தெருக்கள் அமைச்சிடமிருந்து கையேற்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அதிகார சபையின் கீழ் கணக்கிடப்பட்டுள்ள சொத்துக்களுக்குரிய உரிமையைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 தலைப்பு 109 - பிரதான செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xix அத்தியாயத்தின் பிரகாரம் அதிகாரிகளுக்கு மாதாந்த வீட்டுப்படிகள் செலுத்த முடியாத போதிலும், 2017 நவம்பர் தொடக்கம் 2020 திசெம்பர் வரை மாகாண சபையின் 19 அதிகாரிகளுக்கு ரூபா 12,417,000 ஆன உத்தியோகபூர்வ வீட்டுப்படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மாகாண சபை சட்டத்தின் 32(3) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கௌரவ ஆளுநரால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் செலவுகள் செய்யப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xxiv அத்தியாயத்தின் 4.2.2, 4.2.3, 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 06 நிறுவனங்களின் மரணித்த மற்றும் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் அல்லது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் முற்பணம் ரூபா 1,868,511 ஆன மிகுதியொன்று அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. | மரணித்த மற்றும் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மிகுதிகள் பணிக்கொடையில் அறவிடப்படுவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற மரணித்த உத்தியோகத்தர்களின் கடன் மிகுதிகள் உரிய பிணையாளியிடமிருந்து அறவிடப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.V பிரிவின் பிரகாரம் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற ஒருவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துகின்ற காலப்பகுதியில் நிறுவனத் தலைவரினால் பொருத்தமான வாரிசு ஒருவர் இனங்காணப்பட வேண்டிய போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு பயிற்சியளிக்கும் பணி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஓய்வுபெற்ற அதிகாரியின் பொறுப்பொன்றாக அவருக்கு கையளிக்கப்படல் வேண்டும். ஆனால் 03 உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளில் 08 பேர் 02 வருடங்கள் தொடக்கம் 05 வரையான காலமொன்றான ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் பொருத்தமான அதிகாரியொருவரால் பயிற்சி அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பயிற்சிக்கு உட்பட்டு அதிகாரி ஒருவரை மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதிகளவிலான வெற்றிடங்கள், அனுபவம் வாய்ந்த அதிகாரிகளின் பற்றாக்குறை மற்றும் சேவையின் தேவை போன்ற விடயங்களின் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் கடமை அடிப்படையிலான நியமனங்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 1.1.7 பிரிவின் மற்றும் 2019 யூன் 27 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாற்றலாகிச் சென்ற அதிகாரிகளின் கடன் மிகுதிகள் மாதாந்த தவணைகளில் தீர்க்கப்பட்டு வருவதால் தீர்க்கப்படாத கடன் மிகுதிகள் காணப்படுகின்றன. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

03(அ) பிரிவின் பிரகாரம் அதிகாரியொருவர் அல்லது ஊழியர் ஒருவர் மாற்றலாகி வந்து 02 மாதங்கள் கடந்த பிறகு அல்லது மாற்றலாகிச் சென்று 03 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களங்களுக்கிடையில் தீர்க்கப்படாத கடன் முற்பணம் மிகுதி காணப்படலாகாத போதிலும், 06 நிறுவனங்களின் வருடத்துக்கும் மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிய ரூபா 2,889,923 ஆன கடன் மிகுதிகள் காணப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 5.III பிரிவின் பிரகாரம் அனைத்து நாடளாவிய ரீதியிலான சேவை நியமன அதிகாரமளிக்கப்பட்டது. அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு என்பதால் மாகாண சபையில் காணப்படுகின்ற சேவைகளுக்கு உரிய பதவிகளுக்காக ஓய்வூதியம், பெற்றுச் சென்ற அதிகாரிகள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். ஆனால் குறித்த அங்கீகாரமின்றி கொழும்பு மாநகர சபையின் 07 கணக்காளர் பதவிகள், | வெற்றிடங்கள் தொடர்பாக காலத்திற்கு காலம் அரச சேவைகள் மாகாண சேவைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டும் நிரப்பப்படுவதற்கு போதுமானளவு அதிகாரிகளின் மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் 05 உள்ளூராட்சி நிறுவனங்களின் 05 கணக்காளர் பதவிகள் மற்றும் 01 மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் பதவி, என்பதாக 13 அதிகாரிகள் ஆளுநரால் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |
| (ஊ) | வருமானக் குறியீடுகள் 05 இற்கான உள்ளபடியான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட அதிக பெறுமதியொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் முரண்கள் 16 சதவீதத்திலிருந்து 388 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அளவுகளைக் கருத்திற் கொண்டு சரியாக வருமானம் மதிப்பிடப்படல் வேண்டும். |
| (எ) | வருமானக் குறியீடுகள் 13 இற்கான உள்ளபடியான வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விடக் குறைந்தளவு பெறுமதியொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் முரண்கள் 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் நிலைமையின் கீழ் நாடு முழுவதும் மூடப்பட்டிருந்தமையால் மொத்த பொருளாதாரத்திற்கும் ஏற்பட்ட பாதகமான நிலைமையினால் மதிப்பிடப்பட்ட வருமான இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியா விட்டால் வருமான மதிப்பீடு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 15 வருமானக் குறியீடுகளுக்கான வருமானம் சேகரித்தல் 24 சதவீதத்திலிருந்து 352 சதவீதம் வரையில் குறைவடைந்திருந்தது. | கொவிட் நிலைமையின் கீழ் நாடு முழுவதும் மூடப்பட்டிருந்தமையால் மொத்த பொருளாதாரத்திற்கும் ஏற்பட்ட பாதகமான நிலைமையினால் மதிப்பிடப்பட்ட வருமான | மதிப்பிடப்பட்ட வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலக்கை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | |
| (ஐ) | வருமானக் கணக்கீட்டு அதிகாரிகள் மூவரால் அந்தந்த நிறுவனங்களில் 05 வருமானக் குறியீடுகளின் கீழ் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 76,569,423 ஆன வருமானம் மீளாய்வாண்டிற்குள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | தபால் மற்றும் நீதிமன்ற அலுவல்கள் தவிர்ந்த ஏற்பட்ட ஒப்பந்தக் கட்டணங்கள் அடங்கலாக முத்திரைக் கட்டணம் மாகாண நிதி விதி 116-1 இன் கீழ் அறவிடப்பட முடியாதென்பது திருப்தியடைந்த பின்னர் அரையாண்டாக நடாத்தப்பட்டு வருகின்ற உதவி ஆணையாளர் குழுவினால் எடுக்கப்படுகின்ற முடிவின் பிரகாரம் அந்நிலுவை மிகுதிகள் பதிவளிக்கப்பட்டமை மேற்கொள்ளப்பட்டது.<br>விற்பனை வரி சகல சான்றுகள் தொடர்பாக திருப்தியடைந்த பின்னரே பதிவளிக்கப்பட்டுள்ளது. | சட்ட வழிகாட்டியில் அல்லது வேறு வழிகாட்டுதல்களில் நிலுவைத் தொகை அறவிடப்பட முடியாமை உறுதிப்படுத்தப்பட்ட கடன் மிகுதிகள் மட்டுமே பதவழிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் 30 வருமானக் குறியீடுகளின் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரையில் அவ்வருமானக் குறியீடுகள் 17 இற்கான ரூபா 11,279,032,524 நிலுவை வருமானமொன்று காணப்பட்டது. | நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமையின் கீழ் வருமானத்தை சேகரிப்பதற்கு தற்போதுள்ள வழிமுறைகள் செயற்படுத்தப்படுதல் நடைமுறையில் சிக்கலாக இருந்தமையால் காலத்திற்கு காலம் வருமானத்தை சேகரிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டமை மற்றும் இற்றைவரையில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | வத்தளைப் பிரதேசச் செயலகத்தினால் குத்தகைக்கு | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவைக் குத்தகை மற்றும் தண்டப்பணம் |

| | | | |
|---|---|---|---|
| | விடப்பட்டுள்ள 17 காணிகளுக்கு உரிய வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணங்களாக ரூபா 500,853 உம் அவற்றுக்கான தண்டமாக ரூபா 170,392 உம் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும், நீண்டகாலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தா 03 காணிகளுக்காக நிலுவைக் குத்தகை கட்டணத் தொகையாக ரூபா 3,021,122 உம் அவற்றுக்கான தண்டமாக ரூபா 98,560 உம் 2020 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | | அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாதுவிட்டால் குத்தகையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | ஜா எலப் பிரதேச செயலகத்தினால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 08 காணிகளுக்கான குத்தகைக் கட்டணம் மற்றும் தண்டமாக ரூபா 3,566,080 ஆனது அறவிடப்பட வேண்டியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவைக் குத்தகை மற்றும் தண்டப்பணம் அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாதுவிட்டால் குத்தகையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (க) | மஹரப் பிரதேச செயலகத்தினால் நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 02 காணிகளுக்கான 2007 தொடக்கம் 2020 வருடம் வரையிலான காலப்பகுதிக்கான ரூபா 7,528,250 ஆன குத்தகைத் தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவைக் குத்தகை மற்றும் தண்டப்பணம் அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாதுவிட்டால் குத்தகையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (கா) | திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு 1974 சனவரி 01 இல் 30 வருடக் குத்தகைக்காக காணியொன்று குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டில் குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் மேலும் 2012 ஆம் ஆண்டில் புதிய அடையாளமாக அரசாங்கத்திற்கே குத்தகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உரிய காணியின் அளவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் புரிந்துணர்வு தொடர்பாக ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டிருந்த தகவல்கள் 2021 பெப்ரவரி 05 வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 30 வருடத்திற்கான குத்தகைக் காலம் முடிவுற்ற பின்னர் தொடர்ந்தும் அச்சங்கத்தினால் உரிய காணி 16 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக குத்தகை செலுத்தப்படாது பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் காணி குத்தகைக்கு விடப்பட்டு குறிப்பிட்ட குத்தகைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கி) | கட்டான பிரதேச செயலகப் | கருத்துரை வழங்கப்படவில்லை. | குத்தகைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவில் அரசின் காணி 622 பேர்ச்சஸ் ஆன 05 துண்டுகள் பதிவு செய்யப்பட்ட 35 குடும்பங்களுக்கு 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக கொடுப்பனவுப் பத்திரங்கள் வழங்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | விடுவதற்கு அல்லது கொடுப்பனவுப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கீ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் 14 இனால் 2020 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த நட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 59,187,542 ஆகும். | ஒரு நிறுவனத்திற்கு மட்டுமே கருத்துரை வழங்கப்படடிருந்தது. | நட்ட இழப்புக்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.10 தலைப்பு 110 - பொறியியல் பணியகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேல் மாகாண நிதி விதி 471.1 இன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சகல பொருட்களும் பொருட் பதிவேடுகளில் பெறுவனவுப் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2018 தொடக்கம் 2020 வருடம் வரையான காலப்பகுதியில் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ரூபா 115,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட | 2018 தொடக்கம் 2020 வரை கொள்வனவு செய்யப்பட்ட Audio Conferencing அமைப்பு பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு அல்லது விநியோகித்தல் / பெறுவனவு உத்தரவுகளின் மூலம் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சபைச் செயலகத்தின் பொருட் | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒலிநாடா கருத்தரங்கு கலந்துரையாடல் (Audio Conferencing) அமைப்பு சபைச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான விநியோகித்தல் மற்றும் பெறுவனவு கட்டளைகள் பரிமாற்றம் செய்யப்படாமையால் சபைச் செயலகத்தின் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | மேல் மாகாண சபையின் சபைத் தலைப்பிற்கு மாகாண பொறியியல் பணியகத்தினால் ரூபா 115 மில்லியன் ஆன தொலைத்தொடர்பு உபகரண அமைப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தயாரிக்கப்பட்டிருந்த ஆரம்ப வேலைப் பிரமாணப் பத்திரத்தின் பிரகாரம் 145 டெலிகேட் அலகுகள் (Delegate Units) கொள்வனவு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டிருந்த அலகுகளின் எண்ணிக்கை 110 ஆக இருந்தமையால் 35 அலகுகளுக்கு அலகொன்று ரூபா 498,031 வீதம் ரூபா 17,431,085 ஆனது மேலதிகச் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் சபையின் முன்மொழிவிற்கான தேர்தல் விசாரணை மேற்கொள்ளப்பட | இக் கொள்வனவிற்கான தீர்மானம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் சபைச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை என்பதை தெரிவிக்கின்றேன். | பரிசோதனையொன்று நடாத்தப்பட்டு முடிவு வாய்ந்த முடிவெடுக்கப்பட்டு மேலதிகமாக கொடுப்பனவுகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டி மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 104 உறுப்பினர்களாக இருந்த போதிலும், தேர்தல் வழங்கப்பட்டிருந்த அலகுகள் (Voting Units) ஒன்று ரூபா 83,105 வீதம் 40 அலகுகள் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டதால் ரூபா 3,324,200 சர்ச்சைக்குரிய செலவொன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் தேவைக்கு மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிரந்த இன்னும் 1058 உபகரண விடயங்கள் பயன்பாடின்றி களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் உத்தரவாதக் காலம் மற்றும் புதுப்பிக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதற்கான இயலுமை காணப்படவில்லை. | | |
| (இ) | மேல் மாகாண சபை பொறியியல் பணியகத்தினால் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிரந்த தளபாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்கள் மென்பொருள் அபிவிருத்தி போன்ற ரூபா 557.98 மில்லியன் ஆன சொத்துக்கள் 2020 திசெம்பர் 31 வரையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சொத்துக்கள் கொள்வனவு விரைவாக பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | பொறியியல் பணியகத்தின் 08 | கருத்துரை | வெற்றிடங்கள் |

| | | |
|---|---|---|
| பொறியியலாளர்கள் பதவிகள், மூன்றாம் மட்டத்தில் 14 தொழில்நுட்ப அலுவலகர் பதவிகள், 09 வடிவமைப்பாளர் பதவிகள், 02 தொழில்நுட்ப அலுவலகர் (QS) பதவிகள், 15 தொழில்நுட்ப அலுவலகர் சிவில் பதவிகள் மற்றும் 04 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | வழங்கப்படவில்லை. | நிரப்பப்பட வேண்டும். |

## 1.11 தலைப்பு 112 - உள்ளூராட்சி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் மாதம் வரையில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 14,025,573 செலவிடப்பட்டு 06 LED பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2016 திசெம்பர் 30 இல் ரூபா 4,328,370 பெறுமதியான 03 பலகைகள் கொள்வனவு செய்வதற்காக மாகாண நிதி விதி 416.1 மற்றும் 2006 பெறுகைப் பணிகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட LED பலகைகள் நிதி விதி 416.1 மற்றும் 2006 பெறுகை பணிகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நிதி விதிகள் மற்றும் பெறுகைப் பணிகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைமனுக் கோரல் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேற்படி 06 பலகைககளில் 03 இற்றைவரையில் செயற்பாட்டு நிலையில் காணப்படாததுடன் மற்றைய 03 பலகைகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதி விதி 431 இன் பிரகாரம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாமையால் செயற்படாத பலகைகளை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 122,976,348 பெறுமதியான சொத்துக்கள் சரியாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மேல் மாகாண சபைப் பிரிவில் அமைந்துள்ள 49 உள்ளூராட்சி சபைகளின் நிலுவை வருமானம் ரூபா 7,295,160,138 ஆக இருந்தது. | 2021 மார்ச் 31 வரை அறவீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மிகைக் கட்டணத் தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 04 மாநகர சபைகள் மற்றும் 02 பிரதேச சபைகளின் அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட 25 மிகைக் கட்டணங்கள் 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 32,682,530 ஆக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய மிகுதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மிகைக் கட்டணத் தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | உள்ளூராட்சி சபைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக 2020 திசெம்பர் 31 வரையில் 14 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டிருந்த 64 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விரைவில் பதில்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.12 தலைப்பு 113 - சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 03 அம்புலன்ஸ் வாகனங்கள், ஒரு கெப் வாகனம், ஒரு ஜீப் மற்றும் முச்சக்கரவண்டி என்பன 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பயன்படுத்தப்படாத வாகனங்களைப் பயன்படுத்துவதற்கும் அல்லது நீக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாதுக்க சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகம் இயங்கி வருகின்ற கட்டிடம் அமைந்துள்ள காணி 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி ரூபா 24,000,000 மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்டு கைப்பற்றுவதற்கான அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் 2021 யூலை 05 ஆந் திகதி வரையில் இக்காணி அதன் | காணியைக் கைப்பற்றுவதற்கு தொடர்பான நடவடிக்கை பாதுக்க பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படும். | காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தனிப்பட்ட
உரிமையாளரிடமிருந்து
கைப்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.13 தலைப்பு 115 - சமூக சேவைகள் திணைக்களம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண சபை அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கின் குறைந்தபட்ச செலவு எல்லை ரூபா 9,000,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான செலவு மீதி ரூபா 8,920,722 ஆக மட்டுமே இருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படாமலிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைககள் மேற்கொள்ளுமாறு அனைத்துப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எல்லைகளை அடைய முடியாவிட்டால் எல்லைகள் திருத்தப்பட வேண்டும். |

## 1.14 தலைப்பு 118 - காணி ஆணையாளர் திணைக்களம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தினால் தனிப்பட்ட நிறுவனத்திற்கு நீண்டகாலமாக குத்தகைக்கு விடப்பட்டிருந்த 1.163 ஹெக்டயர் ஆன காணிக்கான | இந்த அறவீடுகள் தொடர்பாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | நிலுவை வருமானம் அறவிடப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

குத்தகைக் காலம் 2020 செப்தெம்பர் 30 இல் முடிவுற்றதுடன் இக்காணியின் உரிமை மீண்டும் பிரதேசச் செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்நிறுவனத்தினால் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை இக்காணியின் பயன்பாட்டிற்காக ரூபா 31,216,249 ஆன நிலுவை குத்தகை தொகையொன்று செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரையில் இந்நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.15 தலைப்பு 123 - வியாபார பெயர் பதிவுத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபாராப் பெயர்ப்பதிவுத் திணைக்களத்தினால் ரூபா 8,631,583 செலுத்தப்பட்டு வியாபார பதிவு சான்றிதழ் வழங்கப்படுவதற்காக மென்பொருளொன்று 2020 யூன் 16 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பிரதேச செயலகங்களுக்கு மென்பொருட்களுக்கான தகவல்களை உள்ளடக்குவதற்கு நுழைவு வசதிகள் வழங்கப்படாத காரணத்தினால் 2021 மார்ச் 19 ஆந் திகதி வரை மென்பொருட்களை கொள்வனவு செய்தமைக்கான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மென்பொருட்களை கொள்வனவு செய்யும் போது நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 1.16 தலைப்பு 126 - கல்வித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைக்காக ரூபா 1,940 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு 1,099 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டிருந்தன. | | |
| (i) மினுவாங்கொட வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட 07 பாடசாலைகளில் அரைவாசி அளவு நிர்மாணிக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்த பாடசாலைக் கட்டிடங்கள் காணப்பட்டதுடன் அக்கட்டிடங்களின் வேலைகளை முடிப்பதற்குத் தேவையான தொகை ரூபா 88,000,000 ஆக மதிப்பிடப்பட்டு 2020 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதற்குத் தேவையான பெறுகைகள் பெறப்பட்டு அக்கட்டிடங்களின் வேலைகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரைவாசி நிர்மாணிக்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருந்த கட்டிடங்களின் நிர்மாணங்களை முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மே.ா/மினு தாகொன்ன மெதடிஸ்ட் ஆரம்ப பாடசாலையில் இடித்து நீக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கட்டிடத்திற்குப் பதிலாக ரூபா 15 மில்லியன் மதிப்பீட்டின் பிரகாரம் புதிய இருமாடிக் கட்டிடமொன்று வழங்கப்படுவதற்கு 2020 ஆம் வருடத்தில் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள செயற்திட்டங்களை செயற்படுத்தல் வேண்டும். |
| (iii) | களணி கல்விப் பிரிவில் அரைவாசி முடிக்கப்பட்ட 25 கட்டிடங்களுக்காக ரூபா 248,653,070 ஆன செலவொன்று செய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடங்களின் மிகுதி வேலைகள் பூரணப்படுத்துவதற்காக ரூபா 221,166,540 தேவைப்பட்டது. அந்த அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் இன்னும் முடிக்கப்படாமையால் அக்கட்டிடங்களுக்காக செலவிட வேண்டிய எதிர்காலச் செலவுகள் அதிகரிப்பதுடன் முடிக்கப்படாத கட்டிடங்கள் வெயில் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரைவாசி நிர்மாணிக்கப்பட்டு மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்டிரந்த கட்டிடங்களின் நிர்மாணங்களை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீர்கொழும்பு வலயக் கல்வி பிரிவிற்கான ‘‘அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’’ செயற்திட்டத்தின் கீழ் 13 செயற்திட்டங்களுக்காக ரூபா 283,400,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அத்தொகையில் 07 பாடசாலைகளுக்கான கட்டிடங்கள் பூரணமாக முடிவடைந்திருந்த போதிலும், 06 கட்டிடங்கள் முடிவடைந்தமைக்கான சதவீதம் 25 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. இக்கட்டிடங்களில் 03 பாடசாலைகளில் ரூபா 20,474,232 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | நிர்மாணங்கள் மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான விலைமனுக்கோரல் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூரணமாக முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நீர்கொழும்பு வலயக் கல்விப் பிரிவில் 2013 ஆம் ஆண்டிலிருந்து நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிரந்த 16 கட்டிடங்களின் வேலைகள் முடிவடையாததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 332,325,018 ஆகும். நிர்மாணத்தைப் பூரணப்படுத்தவதற்காக மேலும் ரூபா 99,300,000 | மாகாண அமைச்சு மட்டத்தில் அபிவிருத்தி திட்டத்தின் அதியுயர் முன்னுரிமைக்கான கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. | மேலதிக மூலதனம் பெற்று வேலைகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்படுமென்பதாக மதிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு உரிய அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலையாக மாற்றும் கருத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ஜாஎல ஹோலிரோசரி மகா வித்தியாலயத்தின் சிற்றுண்டிச்சாலை மற்றும் ஆசிரியர் விடுதிகள் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 6,929,991 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டு சுடரை வரை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அத்துடன் அரைவாசி முடிக்கப்பட்டுள்ள இரு கட்டிடங்கள் காணப்படுகின்ற இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவை நடாத்திச் செல்வதற்கு போதுமானளவு கட்டிடங்கள் இல்லாமையால் 800 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயமொன்றில் ஆரம்ப பிரிவின் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இச் செயற்திட்டம் இல்லாது இடைநடுவில் நிறுத்தப்படுவதால் பாடசாலை பாதுகாப்பு, இரும்புக் கம்பிகள் துருப்பிடித்தல், பாடசாலை சொத்துக்களுக்கு சேதம் | இந்நிர்மாண நடவடிக்கைகள் விரைவில் முடிப்பதற்குத் தேவையான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்ட பணிப்பாளருக்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிர்மாண நடவடிக்கைகளை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படல் மற்றும் டெங்கு பரவுதல் போன்ற அபாயகரமான சூழலொன்றை உருவாக்குதல் மற்றும் கட்டிட வசதிகள் குறைவாக இருப்பதால் ஆரம்பப் பிரிவு மாணவர்களும் பல்வேறு சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது. | | |
| (உ) | நீர்கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் 2017 மார்ச் 06 ஆந் திகதி வேலை தொடங்கப்பட்ட புனித செபஸ்தியார் மகா வித்தியாலயத்தின் இரு மாடிகளைக் கொண்ட தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2018 ஆகஸ்ட் 04 இலிருந்து இடைநிறுத்தப்பட்டது. ரூபா 22,860,962 ஆனது செலவிடப்பட்டு அரைவாசி கட்டப்பட்டுள்ள இக்கட்டிடம் இரு வருட காலமாக சுற்றுச்சூழலுக்கு ஆளாகியிருந்ததால் இரும்புக் கம்பி துருப்பிடித்துக் காணப்பட்டதாக 2020 செப்தெம்பர் 28 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நிர்மாணத்தை மீண்டும் தொடங்குவதற்காக விலைமனுக் கோரல் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் பெறப்படுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | வேலைகள் தொடங்கப்பட்ட நிர்மாணங்கள் விரைவில் முடிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கம்பஹா வலயக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான 11 மாகாண சபைப் பாடசாலை உத்தியோகபூர்வ மனைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 04 திருத்தப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் 02 பயன்படுத்தப்பட முடியாத மற்றும் அழிந்து வரும் நிலையில் இருப்பதும் அவதானிக்கப்பட்டது. | 04 உத்தியோகபூர்வ மனைகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் 01 ஐ இடித்து நீக்குவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | பாடசாலை உத்தியோகபூர்வ மனைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | மினுவாங்கொடை வலயத்தின் அபாயத்துடன் கூடிய மிக விரைவில் மேற்கூரைத் திருத்தம் செய்ய வேண்டிய கட்டிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 21 பாடசாலைகளில் 19 பாடசாலைகள் அவ்வாறான அபாயத்துடன் கூடிய கட்டிடங்களில் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன் 02 பாடசாலைகளின் கூரைகள் இடிந்து வீழ்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அபாயத்துடன் கூடிய கூரைகளைத் திருத்துவதற்காக ரூபா 100,500,000 ஆன மொத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2020 ஆம் வருடத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இப்பாடசாலைகளின் கூரை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 04 கட்டிடங்கள் இற்றை வரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் மிகுதி பாடசாலை முன்னுரிமைப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. | அபாயத்துடன் கூடிய மிகவும் அவசர திருத்த வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கடந்த இரு தசாப்தங்களில் கம்பஹா வலயக் கல்வி பிரிவிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்த காரணத்தினால் 15 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. | மூடப்பட்ட 14 பாடசாலைகள் தற்போது பிரதேசச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் மட்டுமே வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஐ) | கடந்த இரு தசாப்தங்களில் நீர்கொழும்பு வலயக் கல்வி பிரிவிலுள்ள பாடசாலைகளில் 12 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 04 பாடசாலைகள் வேறு பாடசாலைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 08 பாடசாலைகள் முழுமையாக மூடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 04 பாடசாலைகள் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சமயத் தலங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. | அக்கல்லூரி கனிஷ்ட கல்லூரிக்கு அல்லது உயர்தரக் கல்லூரியாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. 03 பாடசாலைகள் கத்தோலிக்க திருச் சபைக்கு சொந்தமானவை என்பதால் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. | மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் மட்டுமே வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஒ) | மினு/ஹுனுமுல்ல மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வுக் கூடமானது உயர்தர வகுப்புக்கள் நடாத்தப்படுகின்ற பாடசாலைகளுக்காக | ஆய்வுகூடம் தற்போது திறக்கப்பட்டுள்ளது. தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சுக்கு | ஆய்வுகூடத்திற்கு தேவையான உபகரணங்கள் விரைவில் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை |

வழங்கப்படுகின்ற Type 01 வகையான தொழில்நுட்ப ஆய்வு கூடமொன்றுக்காக இருந்த போதிலும், இப்பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் நடாத்தப்படாமையால் Type 01 தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கான தேவையொன்று இல்லாமை அவதானிக்கப்பட்டது. இத்தொழில்நுட்ப ஆய்வு கூடத்தில் இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் ஆய்வகங்களுக்காக (Chemistry மற்றும் Physics / Mathematics Lab) ஒதுக்கப்பட்டிருந்த தரைத் தளம் தற்போது 6-11 வகுப்புக்களுக்கான கணித ஆய்வகமாக பராமரிக்கப்பட்டு வருவதுடன் மொழி ஆய்வகம் (Language Lab) மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆய்வகமாக (Information Technology Lab) வகைப்படுத்தப்பட்டிருந்த மேல் மாடி அந்த ஆய்வகங்களுக்காக வழங்கப்பட வேண்டிய 60 கணனி நாற்காலிகள் மற்றும் 62 கணனிகள் உட்பட 216 பாகங்கள் வழங்கப்படாத காரணத்தினால் கல்வி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

அறிவிக்கப்பட்டுள்ளது.

எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மினுவாங்கொடை வலயக் கல்வி பிரிவில் தற்போது 100 இற்கும் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட 31 பாடசாலைகள் காணப்பட்டமை மற்றும் 1996 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் 15 பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மாணவர் எண்ணிக்கை குறைவான பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் மட்டுமே வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,170,517,374 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 2,441,053,486 ஆகும். அதன் பிரகாரம் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 3,611,570,860 ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டதுடன் அம்முன்னேற்றத்திற்கு வரி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 19,664,203,127 ஆல் குறைவடைந்த போதிலும் அரசின் மீண்டெழும் மானியங்கள் பெறுவனவு ரூபா 27,593,250,000 ஆல் அதிகரித்தமையே காரணமாக இருந்தது.